S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி டிசம்பர் 06 * 2025 * மலர் -1 * இதழ்-188* VOL-1 * ISSUE-188 விலை ரூ.3 * பக்கம் -4

## திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில்

# ரூ. 200 கோடியில் பிக்டெக் தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!







திருப்பெரும்புதூர்.டிச.6–

திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ. 200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிக்டெக் தொழிற்சாலையை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார் .அங்கு வந்த முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ. 200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிக்டெக் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது. தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு தொழில்துறை எஸ்டேட் ஆகும். மின்னணு உற்பத்தி, குறைக்கடத்திகள், நுகர்வோர் மின்னணுவியல் மற்றும் ஐ டி வன்பொருள் உற்பத்திக்கான வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தி, மின்னணு மற்றும் மின் கூறுகள் உற்பத்தித் துறைகளை ஆதரிப்பதற்காக இந்தப் பூங்கா அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நவீன உள்கட்டமைப்பு, அரசாங்க சலுகைகள் மற்றும் முக்கிய போக்குவரத்து மையங்களுக்கு மூலோபாய அருகாமையில் இருப்பதால், பிள்ளைப்பாக்கம்தொழில்துறை பூங்கா, இந்தியாவில் முன்னணி மின்னணு உற்பத்தி மையமாக தனது நிலையை வலுப்படுத்தும் தமிழ்நாட்டின் முயற்சிகளில் ஒரு முக்கிய பகுதியாகும்.

இப்புதிய தொழிற்சாலை திறப்பு விழா நேற்று காலை 9.30 மணியளவில் நடந்தது. முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின்இப்புதிய தொழிற்சாலையை திறந்து வைத்தார் . முன்னதாக இந்த தொழிற்சாலையை திறந்து வைக்க வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கசார்பில்,மேள–தாளம்,பேண்டுவாத்தியம்முழங்கபிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.



மறைந்த அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் 9வது நினைவு நாளை ஒட்டி அவரது நினைவிடத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து வணங்கினார்.உடன் முன்னாள் அமைச்சர்கள் கேபி முனுசாமி,எஸ் பி வேலுமணி டி ஜெயக்குமார்,பா வளர்மதி கோகுல இந்திரா,காமராஜ் உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அத்தனூர் பேரூராட்சி பகுதிகளில் பல்வேறு பணிகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் அடிக்கல் நாட்டி, பணியை தொடங்கி வைத்தார். இதில் வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர் துரைசாமி, பேரூராட்சி செயல் அலுவலர் விஜயன், அத்தனூர் பேரூராட்சி தலைவர் சின்னசாமி, பேரூர் செயலாளர் மற்றும் துணை தலைவர் கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



விருதுநகர் மாவட்ட குடிநீர் தேவைக்காக வைகை அணையில் இருந்து கிருதுமால் நதி வழியாக 650 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் மற்றும் பாசன தேவைக்காக மொத்தம் 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க பொதுப்பணித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

### சினிமா வாய்ப்பு தருவதாகக் கூறி

## சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த இணை இயக்குனர் உள்ளிட்ட 3 பேர் கைது !

ஐதராபாத் , டிச.6

ஐதராபாத்தில் சினிமா வாய்ப்பு தருவதாகக் கூறி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக கேமராமேன் ,இணை இயக்குனர்,ஒளிப்பதிவாளர் கைது செய்யப்பட்டனர். தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள பிலிம் நகர்பகுதியைச் சேர்ந்த 13 வயது சிறுமி தனது மூத்த சகோதரியுடன் தங்கி உள்ளூர் பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவரது தாயாருக்கு கடப்பா மாவட்டத்தைச் சேர்ந்த திரைப்பட இணை இயக்குனர் பண்டி வெங்கட சிவ ரெட்டி மற்றும் ஒளிப்பதிவாளர் பெணிகேலபதி அனில் ஆகியோர் அறிமுகமானவர்கள். அவர்கள் அடிக்கடி தங்கள் வீட்டிற்கு வந்து சிறுமியை கண்காணித்து வந்தனர். திரைத்துறையில் தங்களுக்கு நல்ல செல்வாக்கு இருப்பதாகவும், அவர்களுடன் நெருக்கமாக இருந்தால் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் சிறுமியை நம்ப வைத்தனர்.

இதனால் அவர்களுடன் சிறுமி நெருக்கமாக இருந்ததால் 3 பேரும் அவளை பல முறை பாலியல் வன்கொடுமை செய்தார். இதைப் பற்றி யாரிடமும் சொல்ல முடியாத சிறுமி, இறுதியாக தனது பள்ளி ஆசிரியரிடம் தெரிவித்தார்.

ஆசிரியரின் புகாருக்கு பிலிம் நகர் போலீசார் வழக்குப் பதிந்து குற்றம் சாட்டப்பட்ட வெங்கட சிவரெட்டி, அனில் மற்றும் சிறுமியின் சகோதரி கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் வி சாரணை நடந்து வருகிறது.

## இரும்பு பைப்பால் கணவன் - மனைவிக்கு சரமாரி அடி!

### பிரபல ரவுடி கைது!!

நெல்லை, டிச.6–

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள மலையடிக்குறிச்சியை சேர்ந்தவர் கணேசன்(45). கூலித்தொழிலாளியானஇவரதுமனைவிகனகமாரி(42). இவர்களது வீட்டில் வைத்திருந்த பணத்தை அதே ஊரை சேர்ந்த ராசா மகன் ஜெயச்சந்திரன் என்ற விஞ்ஞானி(37) என்பவர்திருடி உள்ளார். இதுதொடர்பாக கனகமாரி ஊர் தலைவரிடம் புகார் தெரிவித்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் கனகமாரி அப்பகுதியில் உள்ள கடைக்கு சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த விஞ்ஞானி எப்படி நீ என்னைப்பற்றி ஊர் தலைவரிடம் புகார் அளிக்கலாம் ? என்று கூறி தகராறு செய்துள்ளார்.

இதையடுத்து அவர்களின் சத்தத்தை கேட்டு கணேசன் ஓடிவந்து விஞ்ஞானியை கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த விஞ்ஞானி அங்கு கிடந்த இரும்பு பைப்பை எடுத்து கணவன்–மனைவி இருவரையும் சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதுகுறித்து புளியங்குடி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கணேசன் மற்றும் கனகமாரியை சிகிச்சைக்காக புளியங்குடி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கனகமாரி தென்காசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனிடையே போலீசார் வருவதை அறிந்த விஞ்ஞானி தலைமறைவாகிவிட்டார். இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குபதிந்து தப்பியோடிய விஞ்ஞானியை கைது செய்தனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் 25 பயனாளிகளுக்குஇலவசவீட்டுமனைபட்டாக்களைஅமைச்சர்ஐ.பெரியசாமிவழங்கினார்.



, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு74 க்குட்பட்ட மங்களபுரம் மற்றும் ஏகாங்கிபுரத்தில் உள்ள மக்களுக்கு இரவு உணவினை மேயர் ஆர்.பிரியா வழங்கினார்.



சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு19ல் மாத்தூர், எம்எம்டிஏ 3வது பிரதான சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் தங்கியிருந்த பொதுமக்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பாய், தலையணை, போர்வை அடங்கிய தொகுப்பினை மணலி மண்டல கண்காணிப்பு அலுவலர் / தோட்டக்கலைத்துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், வழங்கினார்.

உள்ளாட்சி அரசு

2025 DEC 06



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர்எம்.பி.அமித் மண்டலம்4, வித்யாகார்த்திக்திருமண மண்டபத்தில் சனிக்கிழமை அன்று அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகர நல அலுவலர் முருகானந்த், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உலக மாற்றுத்திறனாளிகள் தின நாளை (டிசம்பர் 3) கொண்டாடும் வகையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 458 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25.76 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி அவர்கள், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி , ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன் நகரமன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன், நகரமன்ற துணைத்தலைவர் சபியுல்லா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், மத்திய அரசின் அலிம்கோ நிறுவன மேலாளர் ரிஷப் மல்கோத்ரா, உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், மற்றும் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்கள் உள்ளனர்.

## ராஜபாளையத்தில் அரசு பஸ்சில் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து மது அருந்திய டிரைவர்! பயணிகள் அதிர்ச்சி !

ராஜபாளையம் டிச 6

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சிவலிங்காபுரத்தை அடுத்துள்ள கோபால புரத்தை சேர்ந்தவர் பால முருகன் (38). அரசு பஸ் டிரைவரான இவர் நேற்று முன்தினம் இரவு ராஜபாளையம் பணிமனைக்கு சென்று கோவைக்கு செல்வதற்காகஅரசுபஸ்சைஇயக்கிக்கொண்டு பஸ் நிலையத்திற்கு வந்தார்.

பின்னர் அவர் பஸ்சுக்குள் தனது இருக்கையில் அமர்ந்து மது அருந்தியதாக கூறப்படுகிறது. இதை பார்த்த பயணிகள் அதிர்ச்சி அடைந்ததோடு அவரிடம் பஸ்சை இருக்கக்கூடாது என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த ராஜபாளையம் போக்கு வரத்து பணிமனை மேலாளர் செல்லபாண்டி சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்

இதனையடுத்து மாற்று டிரைவர் வரவழைக்கப் பட்டு ஒரு மணி நேரம் தாமதாக கோவைக்கு அரசு பஸ் புறப்பட்டு சென்றது.

அரசு பஸ்சில் பணி யின்போது அலட்சியமாக மது அருந்திய டிரைவர் பாலமுருகன் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உயரதிகாரிகள்

விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த 3 நாட்களுக்கு சிவகங்கை முன்பு மாவட்டம் காரைக்குடியில் அரசு பஸ்கள் மோதிய விபத்தில் 11 பேர் பலியானார்கள். 40க்கும் மேற்பட்டோர் காயம டைந்தனர்.

அலட்சியமாக செயல்பட்ட தாக அரசு பஸ் டிரைவர் மீது வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.மேலும் சமீபகாலமாக வாகன விபத்துகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது

இந்த நிலையில் ராஜபாளையத்தில் புறப்பட தயாராக இருந்த அரசு பஸ்சில் டிரைவர் மது அருந்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சமீப கால ஆய்வின் படி தொலை தூரம் செல்லும் கனரக வாகன ஓட்டிகள் மது அருந்திவிட்டு வாகனம் இயக்குவது அதிகரித்து விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது என்று தெரியவருகிறது இதை காவல் துறையினர் ஆய்வு செய்து தடுக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.



## விழுப்புரத்தில் போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு!

விழுப்புரம் டிச 6

விழுப்புரத்தில், போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு கருத்த அன்று விழுப்புரம் நகரத்தில் இயங்கிவரும் அன்னை தெரேசா பேரா மெடிக்கல் செவிலியர் கல்லூரியில், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தமிழ் நாடு கிளையின் அறிவுறுத்தலின் படி, போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நிர்வாக இயக்குனர் திரு. திருமால் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவின் தன்னார் வளரும். மாவட்ட ரெட் கிராஸ் சொசைட்டி நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும்

விழுப்புரம் கல்வி மாவட்டக் கன்வீனர். முனைவர். ம.பாபு செல்வதுரை அவர்கள் கலந்துக் கொண்டு

போதை பழக்கத்திற்கு அடிமையாகாமல் தனி ஒழுக்கத்துடன் வாழ்வேன் என்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை தொடர்ந்து

மற்றவர்களுக்கு

போதை பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், இது சார்ந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை பள்ளி, கல்லூரிகள் மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்கும் பணியில் கல்லூரி மாணவர்களின் தன்னார்வமாக செயல்பட வேண்டும். அத்துடன் தற்கொலையினை தடுத்திடும் வண்ணம்

தன்னம்பிக்கை, மன உறுதி, சவால்களைஎதிர்கொள்ளும்ஆற்றலைவளர்த்து கொள்வதோடு, கஷ்டத்திலும், மன உலைச்சலிலும் இருப்போருக்கு ஆறுதல் படுத்தும் ஆலோசகராகவும்,

கல்லூரி மாணவர்கள் செயல்பட வேண்டும் என கருத்துரையாற்றினார்.

இறுதியில் போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பினை வலியுறுத்தி சுமார் 100 செவிலியர் பயிற்சி மாணவிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

### பிரிகேட் வேர்ல்ட் டிரேட் சென்டர் ல் டோஸ்கானோ,சால்ட்:

## சென்னை நகருக்கு இரு புதிய தனித்து வமான உணவு அனுபவங்கள்!



சென்னை, டிச.6

பெருங்குடியின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான பிரிகேட் வேர்ல்ட் டிரேட் சென்டர் வளாகத்தில், இத்தாலி உணவகம் டோஸ்கானோ மற்றும் நவீன இந்திய உணவகமான சால்ட் உள்ளிட்ட இரண்டு புதிய உணவகங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஒரே முகவரியில் இயங்கினாலும், இரண்டுமே தங்களுக்கென தனித்துவமான பாணி, சுவை மற்றும் அனுபவத்தை வழங்குகிறது. இதனால் உணவு ஆர்வலர்களுக்குஒருபுதிய,இனியஉணவுஇலக்குஉருவாகியுள்ளது. டோஸ்கானோ உணவகம் அதன் நேர்த்தியான ஐரோப்பிய தோற்றத்தால் விருந்தினர்களை ஈர்க்க, சால்ட் உணவகம் இந்திய சமையற்கலைக்கு நவீன வடிவமைப்பு மற்றும் ‘ஃபைன் டைனிங்’ அனுபவத்தை வழங்குகிறது. சோர்டோ பிட்சா, டிராமிசு ஆகிய இத்தாலி சிறப்புகளுடன், சார்கோல் சிக்கன் டிக்கா, பர்தா மட்டன் பிரியாணி போன்ற இந்திய பிரபல உணவுகளும் இங்கு விருந்தினர்களை கவுரவ் இருக்கின்றன. இந்த இரண்டு உணவகங்களும் தலைமை செஃப் களான கௌதம் பாலசுப்ரமணியன் மற்றும் பாலாஜி பாலச்சந்தர் ஆகியோரின் வழிகாட்டுதலில் துவங்கப்பட்டுள்ளன. உண்மையான சுவை, புதுமை மற்றும் இரு சமையல் மரபுகளின் மீதான மரியாதை பிரதிபலிக்கும் வகையில், இந்த இரட்டை உணவகங்கள் சென்னை நகரின் உணவு அனுபவத்தை ஒரு புதிய உயரத்திற்கு கொண்டு செல்லவிருக்கிறேன்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி ஆணையர் சரவணக்குமார உத்தரவின் பேரில் திருத்தணி நகாட்சியில் சுகாதார ஆய்வாளர் மா. ரவிச்சந்தின் (ம) களபணி உதவியாளர்,துப்புரவு பணி மேற்பார்வை யாளர்கள் அனைவரும் இணைந்து தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்களை விற்பனை செய்த கடைகளுக்கு நேரிடையாக சென்று ஆய்வு செய்து பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட பிளாஸ்டிக் 200 கிலோ அபராதம் ரூ.25000 விதிக்கப்பட்டது இப்பணி தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

### ஷாவ்மி இந்தியா

## புதிய REDMI 15C 5G ஸ்மார்ட்போனை கண்கவர் டிசைனுடன் அறிமுகப்படுத்தியது!



சென்னை டிச 6

ஷாவ்மி இந்தியா தனது புதிய REDMI 15C 5G ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. கண்கவர் டிசைன், 17.53 செ.மீ. HD+ இம்மர்சிவ் டிஸ்ப்ளே மற்றும் நாள் முழுவதும் நீடிக்கும் செயல்திறன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, வேலை மற்றும் பொழுதுபோக்கு இடையே தடையின்றி மாறி பயன்படுத்தும் பயனர்களுக்காக இந்த மொபைல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்லைட் ப்ளூ, டஸ்க் பர்பிள் மற்றும் மிட்நைட் பிளாக் நிறங்களில் கிடைக்கும் இந்த மாடல், 3D குவாட்கர்வ்டு பின்புறம் மற்றும் ஃப்ளோட்டிங் கார்ட்டர் கேமரா டிசைனுடன் வருகிறது. அறிமுகத்தை குறித்து பேசிய ஷாவ்மி இந்தியா நிறுவனத்தின் தலைமை மார்க்கெட்டிங் அலுவலர் அனுஜ் சர்மா அவர்கள், “REDMI 15C 5G மூலம் அன்றாட பயனர்களுக்கு சிரமமில்லாத அனுபவத்தைவழங்குவதேஎங்களின்நோக்கம்.பெரியடிஸ்ப்ளே, நாள் முழுவதும் நீடிக்கும் பேட்டரி மற்றும் ராயல் டிசைன் ஆகியவை மக்கள் தங்கள் மொபைல் போன்களை இன்று எப்படிபயன்படுத்துகிறார்கள்என்பதைபிரதிபலிக்கின்றன. எதிர்காலத்திலும் பயனர்களுக்கு உண்மையில் தேவையானவற்றை மையமாக கொண்டு REDMI அனுபவத்தை மேம்படுத்துவோம்” என்றார்.

### தேனியில்

## புதிய ASC உடன் ISUZU மோட்டார்ஸ்; இந்தியா தனது கூட்டமைவை விரிவுபடுத்துகிறது!



தேனி, டிச.6

இசுசு மோட்டார்ஸ் இந்தியா, தென் தமிழ்நாட்டில் வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை மேம்படுத்த புதிய அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டரை (ASC) தேனியில் AML ஆட்டோசோன் மூலம் திறந்துள்ளது. உஞ்சம்பட்டியில் உள்ள சேரன்ஸ் ஃபன் பார்க் அருகே W8/289/6 பெரியகுளம் மெயின் ரோடு என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த மையம் 10,500 சதுர அடி பரப்பளவிலும் 12 சர்வீஸ் பேக்களுடன் தொழில்நுட்பம் மிக்க பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு சேவைகளை வழங்கத் தயாராக உள்ளது. டோரு கிஷிமோட்டோ, துணை நிர்வாக இயக்குநர், இசுசு மோட்டார்ஸ் இந்தியா கூறுகையில், “நமது வாடிக்கையாளர்களுக்கு அருகில் இருக்க எங்கள் நெட்வொர்க்கை விரிவுபடுத்தி வருகிறோம். தேனியில் AML ஆட்டோசோன் நியமனம், உயர்தரமான மற்றும் வாடிக்கையாளர் மையமான சேவை வழங்குவதாக ISUZU உறுதிப்படுத்துகிறது.” திலிப் குமார், டீலர் பிரின்சிபல், AML ஆட்டோசோன், “தேனியில் புதிய சேவை மையத்தை அமைக்க இசுசு மோட்டார்ஸ் இந்தியாவுடன் இணைவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இம்மையம் சிறந்த உள்கட்டமைப்பு, பயிற்சி பெற்ற மனிதவளம் மற்றும் வாடிக்கையாளர் மைய செயல்முறைகளுடன், திறமையான மற்றும் உயர்தர சேவையை வழங்கும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள்ளது,” என்று கூறினார்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில், உலகஎய்ட்ஸ்தினம்2025முன்னிட்டுஎச்.ஐ.வி/எய்ட்ஸ்பற்றியவிழிப்புணர்வுகையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர்ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், கையொப்பமிட்டு துவக்கிவைத்தார்.உடன்உதவிஆட்சியர்(பயிற்சி)ரா.வெங்கடேஷ்வரன்முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.லூசி நிர்மல் மடோனா, இணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) லதா, இணை இயக்குநர் (குடும்ப நலம்) பத்மாவதி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுபாட்டு அலுவலர் /மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில்குமார், மாவட்ட திட்ட மேலாளர் (எய்ட்ஸ் கட்டுபாட்டு)நல்லதம்பி உட்பட பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியம் ஜமீன் ஊத்துக்குளி ஊராட்சியில் தோட்டக்கலைத்துறை சார்பில் பசுமை குடில் முறையில் வெள்ளரி சாகுபடி முறையினைமாவட்டஆட்சித்தலைவர்பவன்குமார்க.கிரியப்பனவர்நேரில்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்திய தேசிய காங்கிரஸின் கடலூர் மேற்கு மாவட்ட தலைவருக்கான நேர்காணலில் பங்கு கொண்டு நமது கடலூர் மாவட்டத்தின் மேலிட பொறுப்பாளர் திரு கே.பி.ஆர் நாயுடு அவர்கள் முன்னிலையில் கடலூர் மேற்கு மாவட்ட தலைவருக்காக மாவட்ட செயலாளர் கடலூர் மேற்கு இந்திய தேசிய காங்கிரஸ் ஆர் வி ஜானகிராமன் M.SC மனு அளித்தனர்.



## சிதம்பரம் நேருநகர் குடியிருப்பு அகற்றுவது குறித்து அனைத்து கட்சி கூட்டம்!

சிதம்பரம், டிச.6

சிதம்பரம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நேரு நகர் குடியிருப்புகள் அகற்றுவது குறித்து அனைத்து கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ராஜா தலைமை வகித்தார். காங்கிரஸ் கட்சி மாவட்டத் துணைத் தலைவர் ராஜா சம்பத்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் அரங்க தமிழ்ஒளி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணை செயலாளர் சேகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் கருப்பையன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொகுதி செயலாளர் குமரன், திராவிட கழக மாவட்ட துணைத் தலைவர் சித்தார்த்தன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நகரத் தலைவர் ஜவகர், மனிதநேய மக்கள் கட்சி நகர தலைவர் ஷாகுல், இந்திய கம்யூனி ஸ்ட் கட்சி வட்ட செயலாளர் தமிமுன்அன்சாரி, விசிக நிர்வாகிகள் கோவி பாவாணன், ஆதிமூலம், இந்திய யூனியன் முஸ்லிம்லீக் மகபூப்உசேன், மாவட்ட இளைஞரணி செயலாளர் முகமது முஸ்தபா, சிதம்பரம் நகராட்சி துணைத் தலைவர் முத்துக்குமரன், மாவட்ட குழு உறுப்பினர் மல்லிகா, நகர்குழு உறுப்பினர்கள் சங்கமேஸ்வரன், அமுதா, கலியமூர்த்தி, அஷ்ரப் அலி, பூபதி, ராகுல், ராஜா, மாரியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது: சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலை ஆக்கிரமிப்பு என்கிற பெயரில் 1000 க்கும் மேற்பட்ட வீடுகளை இழந்த மக்களுக்கு சிதம்பரம் நகர் பகுதியிலேயே உடனடியாக மாற்று இடம் வழங்கிட வேண்டும். 33 வது வார்டு நேரு நகர் பகுதியில் வசித்து வரும் மக்களை அரசு காமராஜர் மருத்துவமனை ஆக்கிரமிப்பு என்கிற பெயரில் தனி நபர்கள் நீதிமன்ற உத்தரவை பெற்று வீடுகளை இடிப்பதை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றிட பொது மக்க ளுக்கு ஆதரவாக மேல்முறையீடு செய்து காப்பாற்ற வேண்டும்.

திமுக கூட்டணி கட்சிகளின் சார்பில் ஒருங்கிணைந்த சிதம்பரம் நகர பகுதி மக்களின் பாதுகாப்பு குழு என்கிற பெயரில் ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கி அனைத்துக் கட்சிகளின் சார்பில் அந்தந்த மாநில தலைவர்களின் மூலம் தமிழக முதல்வரை சந்தித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கொண்டு செல்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் நேரு நகர் குடியிருப்பு அகற்றவதை கண்டித்து டிச.16ம் தேதி காலை சிதம்பரம் கஞ்சி தொட்டி அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விருதுநகர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓ.சுகபுத்ரா புத்தகம் வழங்கி வரவேற்றார்.

# எஸ்.ஐ.ஆர். படிவங்களை பூர்த்தி செய்து விரைவில் ஒப்படைக்க வேண்டும்! வேண்டுகோள்!!

செங்கல்பட்டு, டிச.6

செங்கல்பட்டு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிக்கு ( 11.12.2025 )அன்று வரை இறுதி நாளாக தேர்தல் ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் வாக்கச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்கப்பட்ட கணக்கீட்டுப்படிவங்களை பூர்த்தி செய்து திரும்ப வழங்கினால் மட்டுமே வாக்காளர்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும். வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயலியில் பதிவேற்றம் செய்திடும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகளை முழுமையாக பூர்த்தி செய்திடும் வகையில், வாக்காளர்கள் இறுதிநாள் வரை காத்திருக்காமல், வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட வாக்குசாவடி நிலை அலுவலர்களிடம் விரைந்து வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



தேர்தல் ஆணையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும், இந்த முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு வாக்காளர்கள் ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, கேட்டுக் கொண்டுள்ளார்.



## அரியலூர் மாவட்டத்தில்

# 24 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.97,149 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவி!

## கலெக்டர்பொ.இரத்தினசாமி வழங்கினார்!!

அரியலூர்,டிச.6

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு ஒற்றுமையை வளர்ப்போம் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, வாசிக்க அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 சர்வ தேச மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்படுகிறது. அதன்படி இன்றையதினம் மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஒற்றுமையை வளர்ப்போம் உறுதிமொழியான "சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் நலனுக்காகவும் எப்போதும் உடன் நிற்போம் என்றும், அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க எங்களாலான அனைத்து முயற்சிகளையும் செய்வோம் என்றும் உறுதி கூறுகிறோம். என மாவட்ட ஆட்சித்தலைவர் வாசிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அதனைத்தொடர்ந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு 01 மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.15,750 மதிப்பில் சக்கர நாற்காலி, 21 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.68,985 மதிப்பில் காதொலி கருவிகள், 01 மாற்றுத்திறன் பயனாளிக்கு ரூ.11,445 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள், 01 பயனாளிக்கு ரூ.969 மதிப்பில் ஆக்ஸிலரி ஊன்றுகோல் என மொத்தம் 24 பயனாளிகளுக்கு ரூ.97,149 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தொட்டியம் கொங்கு நாடு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் பள்ளி கல்வித்துறை சார்பாக மாநில அளவிலான 66–வது குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது,

## ராஜபாளையம் பெட்டிக்கடையில்

# புகையிலைப் பொருட்கள் விற்றவர் கைது!

ராஜபாளையம் டிச 6

ராஜபாளையம் பஞ்சு மார்க்கெட் பகுதியில் உள்ள பெட்டிக்கடையில் அரசினால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக வடக்கு காவல் நிலையத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் சார்பு ஆய்வாளர் மாரியம்மாள் போலீசார் சகிதம் அங்கு சென்று சோதனை இட்டபோது விற்பனைக்கு மறைத்து வைத்திருந்த குட்கா பான்பராக் உள்ளிட்ட புகையிலை சுமார் 120 பாக்கெட்டுகள் இருந்தது.9 கிலோ எடையுள்ள இதன் மதிப்பு சுமார் 7 ஆயிரம் ரூபாய் என்று கூறப்படுகிறது இதனையடுத்து பொருட்களை கைப்பற்றியதோடுஅழகாபுரியைச்சேர்ந்தகடையின் உரிமையாளர் காளியப்பன் மகன் முனியாண்டி 49 கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.



# மலையப்பன்பட்டி புனித சவேரியார் திருவிழா!

வத்தலகுண்டு,டிச.6

வத்தலகுண்டு அருகே புனித சவேரியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது. வத்தலக்குண்டு அருகே உள்ள மலையப்பன்பட்டி கிராமத்தில் புனித சவேரியார் ஆலய திருவிழா கடந்த 25ம் தேதி கொடியேற்றத்துடன்துவங்கியது. புதுமை புனிதர் சவேரியாரின் 16ஆம் ஆண்டு பங்குத் திருவிழாவும் அன்னதான பெருவிழாவும் நடந்தது. அதனைத் தொடர்ந்து திருப்பலி நடந்தது. திருப்பலிக்கு வத்தலகுண்டு பங்குத்தந்தை வட்டார அதிபர் எட்வர்ட்ராஜ் தலைமை தாங்கினார். அன்னை வேளாங்கண்ணி பள்ளி முதல்வர் பால்ராஜ் உதவி பங்கு தந்தை மதியழகன் ஆகியோர் திருப்பலி நடத்தினர். திருவிழாவில் மலையப்பன்பட்டி ஊர் பொதுமக்கள் உறவினர்கள் நண்பர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அசைவ விருந்து நடந்தது.திருவிழா ஏற்பாடுகளை சவேரியார் அன்னதான குழு நண்பர்கள் செய்திருந்தனர்.

## புது ப்ளூ நிறத்துடன்


# நத்திங் Phone (3a) Lite ரூ.19,999க்கு இந்தியாவில் விற்பனைக்குவருகிறது!

சென்னை , டிச.6



லண்டனை மையமாக கொண்ட நத்திங் நிறுவனம் தனது Phone (3a) Lite ஸ்மார்ட்போனை இந்தியாவில் விற்ப னைக்கு கொண்டு வந்துள்ளது. கிளாசிக் பிளாக், ஒயிட் நிறங்களுக்கு இணையாக, புதிய ப்ளூ கலர்யும் அறிமுகமாகியுள்ளது. 6.77இன்ச்AMOLEDடிஸ்ப்ளே, 50MPகேமரா, MediaTek Dimensity 7300 Pro சிப், 5000 mAh பேட்டரி ஆகிய அம்சங்களுடன் வரும் இந்த மாடலின் 8GB + 128GB ரகம் ரூ.20,999க்கு விற்பனைக்கு வருகிறது; வங்கி தள்ளுபடி களின் விலை ரூ.19,999 ஆகும். Phone (3a) Lite, நத்திங்க் சிக்னேச்சர் டிரான்ஸ்பரண்ட் வடிவமைப்பை தொடர்ந்து, IP54 தண்ணீர்தூசி எதிர்ப்பு, அலுமினிய உள் பிரேம் மற்றும் இலகுவான எடையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 120 Hz அடாப்டிவ் ரெப்ரெஷ் ரேட், 3000 nits HDR பிரைட்னஸ் கொண்ட 6.77 இன்ச் AMOLED டிஸ்ப்ளே இதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். 50 MP மெயின் கேமரா ட்ரூ லென்ஸ் என்ஜின் 4.0, அல்ட்ரா XDR, நைட் மோடு மற்றும் 4K 30fps வீடியோ ரெக்கார்டிங் ஆதரவு கொண்டது; 16 MP செல்ஃபி கேமராவும் சுத்தமான காட்சி தருகிறது.MediaTek Dimensity 7300 Pro சிப்பால் இயக்கப்படும் இந்த ஸ்மார்ட்போன் 16 GB RAM (விர்ச்சுவல் RAM உடன்) மற்றும் 2 TB வரை விரிவாக்கக்கூடிய ஸ்டோரேஜுடன் வருகிறது. 5000 mAh பேட்டரி, 33 W ஃபாஸ்ட் சார்ஜிங் மூலம் முழுநாள் பயன்பாட்டை வழங்குகிறது.

# புதிய 'எக்ஸ்க்விசிட்' தரத்துடன் லெக்சஸ் RX இந்தியாவில் மேலும் வலுவடைந்தது!



சென்னை டிச.6

லெக்சஸ் இந்தியா தனது பிரபலமான RX மாடலுக்கு புதிய 'எ க்ஸ்க் விசிட்' தரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ECT4 தொழில்நுட்பம் தொடர்ந்து மென்மையான மற்றும் சக்திவாய்ந்த துருவிழுப்பை வழங்குகிறது. மேலும், மாடல் மார்க் லெவின்சன்® 21 ஸ்பீக்கர் ஆடியோ அமைப்பு, AMOLED டிஸ்ப்ளே மற்றும் Lexus Safety System+ போன்ற மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களையும் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை RX மாடல் 12% வளர்ச்சி பெற்றுள்ளது. அதே சமயம், எஸ்யூவிகள் லெக்சஸ் இந்தியாவின் மொத்த செயல்திறனில் 40% பங்கைக் கொண்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் லக்ஷுரி எஸ்யூவி பிரிவில் RX மாடலின் முக்கியத்துவம் மேலும் உயர்ந்துள்ளது.

இந்த அறிமுகம் குறித்து லெக்சஸ் இந்தியா தலைவர் ஹிகாரு இக்யூச்சி தெரிவித்ததாவது: "RX, ஆடம்பரம், வடிவமைப்பு மற்றும் நிலையான செயல்திறன் ஆகியவற்றில் எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. புதிய எக்ஸ்க்விசிட் தரம் விருந்தினர்களுக்கு மேலும் பல விருப்பங்களை வழங்குவதோடு, இந்தியாவில் லெக்சஸ் அனுபவத்தை மேம்படுத்தும் எங்கள் உறுதியையும் காட்டுகிறது" என்றார். Lexus Luxury Care, 8 ஆண்டுகள் உத்தரவாதம் மற்றும் ரோட்சைட் உதவி உள்ளிட்ட சேவைகளும் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றன.




விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில், உலக எய்ட்ஸ் தினம் 2025 முன்னிட்டு எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றிய மாவட்ட அளவிலான நடத்தப்பட்ட மாரத்தான் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கோப்பைகளை மாவட்ட ஆட்சித்தலைவர்ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், வழங்கினார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி)ரா.வெங்கடேஷ்வரன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர்லூசி நிர்மல் மடோனா, இணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்)லதா, இணை இயக்குநர் (குடும்ப நலம்)பத்மாவதி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுபாட்டு அலுவலர் / மாவட்ட சுகாதார அலுவலர்செந்தில்குமார், மாவட்ட திட்ட மேலாளர் (எய்ட்ஸ் கட்டுபாட்டு)நல்லதம்பி உட்பட பலர் உள்ளனர்.



# நாகப்பட்டினத்தில் ஆளுநரை கண்டித்து திராவிட கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!

## இந்திய கூட்டணி கட்சியினர் பங்கேற்பு!!

நாகப்பட்டினம்,டிச.6

தமிழ்நாட்டையும், தமிழர்களையும் பயங்கரவாதிகளாக சித்தரித்து பழித்து பேசி வரும் ஆளுநர் ரவியை கண்டித்து நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம் அருகே அவுரித் திடலில் திராவிட கழகத்தினர் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திராவிடர் கழக மாவட்ட தலைவர் நெப்போலியன் தலைமையிலும் திராவிட கழக மாவட்ட செயலாளர் புபேஸ் குப்தா முன்னிலையிலும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்ட திமுக செயலாளரும் தமிழக மீன் வளர்ச்சி கழகத்தின் தலைவர் என்,கௌதமன் பங்கேற்று கண்டன கோஷங்களை எழுப்பினர் .

அதில் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் வரிப்பணத்தில் சம்பளத்தை வாங்கிக் கொண்டு, தமிழ்நாட்டையும் , தமிழர்களையும் இழிவுபடுத்தும் வகையில் செயல்பட்டு வரும் ஆளுநர் ரவியின் அராஜக போக்கை கண்டித்தும்,

நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்தை விளைவித்து, சமஸ்கிருத திணிப்பையும், பண்பாட்டு படையெடுப்பையும் பொறுக்க மாட்டோம் என இந்திய கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் .

இதில் மாநில திமுக விவசாய தொழிலாளர்அணி செயலாளர்மதிவாணன்,நகர மன்ற தலைவரும் நகர திமுக செயலாளருமான இரா .மாரிமுத்து உள்ளிட்ட இந்திய கூட்டணி கட்சியினர் 200 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.




திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில், மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் மற்றும் BAPASI இணைந்து நடத்தும் 5ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவின்ஐந்தாம்நாளானதிருப்பத்தூர்உதவிப்பேராசிரியர்முனைவர்க.மோகன்காந்தி "பெண்களின் பெருவீரம்" என்ற தலைப்பில் கருத்துரையும், வாணியம்பாடி பேராசிரியர்/ கவிஞர்கவியருவிதி.மு.அப்துல்காதர்"யுரேகா"என்றதலைப்பிலும்சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட நூலக அலுவலர் மு.பிரேமா உட்பட பலர் உடனிருந்தனர்.



# திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் 75 ஆவது பவள விழா!

திருப்பத்தூர் டிச.6

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் தூய நெஞ்சக் கல்லூரியின் தேசிய மாணவர் படையின் மாநில அளவிலான மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து சுமார் 600 தேசிய மாணவர்படை மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் சேலம் 12 தமிழ்நாடு பட்டாலியன் தேசிய மாணவர் படைப் பிரிவு கமாண்டிங் அதிகாரி கர்னல். ராஜிவ் குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இராணுவம் மற்றும் இதரப் பாதுகாப்புப் படைகளில் உள்ள பணி வாய்ப்புகளை பற்றி விரிவாக எடுத்துரைத்து மாணவர்களோடு கலந்துரையாடினார். அவரைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட 12 தமிழ்நாடு பட்டாலியன் தேசிய மாணவர் படை பிரிவுநிர்வாகஅதிகாரி லெப்டினன்ட்.கர்னல் பிரகாஷ் இராணுவத்தில் வழங்கப்படும் பணி முன்னுரிமை வாய்ப்புகள், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் பற்றி தேசிய மாணவர் படை மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைத்தார். இம்மாநாட்டில் கல்லூரியின் செயலர் முனைவர் பிரவீன் பீட்டர் முன்னிலை வகித்தார். ஆண்டனிராஜ் தலைமை வகித்தார். மேலும் கல்லூரியின் கூடுதல் முதல்வர் முனைவர் தியோபில் ஆனந்த் வாழ்த்துரை வழங்கினார். இம்மாநில அளவிலான மாநாட்டிற்குத் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட். சிவகுமார் உரிய ஏற்பாடுகளை செய்திருந்தார். இம்மாநாட்டில் பல கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் விவாதங்களும் நடைபெற்று முடிவுற்றது.

# முதல் திருமணத்தை மறைத்து என்ஜினீயரை இன்ஸ்டாகிராமில் காதலித்து 2-வதாக கரம் பிடித்த பெண்!

## 3 நாட்களில் சாயம் வெளுத்து பரமத்தி வேலூரில் சிக்கினார்!!



நாமக்கல், டிச 6

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அருகே பாண்டமங்கலத்தைச் சேர்ந்த குமார் மகன் ஸ்ரீதர் (34)பெங்களூரில்ஐ.டி.ஐ., கம்பெனியில் வேலை பார்த்து வரும் இவருக்கும் சென்னையில் ஐ.டி.ஐ., கம்பெனியில் வேலை பார்த்து வரும் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகே சிவந்திபுரத்தைச் சேர்ந்த ராமசாமி, அமுதா தம்பதியரின் மகள் மகாஸ்ரீ (வயது 42) என்பவருக்கும் இன்ஸ்டாகிராம் மூலம் காதல் ஏற்பட்டது. ஒரு வருடத்துக்கு நட்பு ஏற்பட்டு நாளடைவில் நட்பு காதலாக மாறியது. இருவரும் அடிக்கடி நேரில் சந்தித்து தங்கள் காதலை வளர்த்துக் கொண்டனர். அப்போது,மகா ஸ்ரீ, தனக்கு 30 வயது என்றும் தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை எனஸ்ரீதரிடம் கூறியுள்ளார். இதனை நம்பிய ஸ்ரீதரை , திருமணம்செய்துகொள்ள மகா ஸ்ரீ வற்புறுத்தியதால் தங்களது காதலை, ஸ்ரீதர் அவரது வீட்டில் சொல்லி உள்ளார். பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதும் அவர்களை சமாதானப்படுத்தி திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 30 ம் தேதி அதிகாலையில் பாண்டமங்கலம் ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் திருமணம் நடந்தது. இதனையடுத்து பொத்தனூர், சமுதாயக் கூடத்தில் வரவேற்பு நிகழ்ச்சியும் நடந்தேறின. வரவேற்பு நிகழ்ச்சியில் இதில் மணமகன் வீட்டார் சார்பாக உறவினர்கள் திரளாக கலந்து கொண்ட நிலையில் பெண் வீட்டார் சார்பில் பெயரளவுக்கு ஒரு சில நபர்களே கலந்து கொண்டனர். காதல் திருமணம் செய்து கொண்ட தம்பதியர் தங்களது குடும்ப இல்லறை வாழ்க்கையை உற்சாகமாக தொடங்கினர். மேலும் இன்டரகிராமில் தங்களது திருமண நிகழ்ச்சி விழா போட்டோ, வீடியோக்களை பதிவிட்டனர். அப்போது தான் உண்மை பூதாகரமாக வெடித்தது.

மகா ஸ்ரீ, இரண்டாம் திருமணம் செய்து கொண்டதை இன்ஸ்டரகிராம் மூலம் அறிந்த,முதல் கணவரின் உறவினர்கள், புது மண தம்பதியரை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் பாண்டமங்கலத்தில் உள்ள மாப்பிள்ளை வீட்டாருக்கு காரில் வந்த முதல் கணவரின் உறவினர்கள், புதுப் மணப்பெண் மகாஸ்ரீயை சரமாரியாக தாக்கினார்.

இந்நிலையில் அப்பகுதியினர், வந்த நபர்களிடம் விசாரித்த போது கடந்த 18 வருடத்திற்கு முன்பே மகா ஸ்ரீ, திருமணம் ஆனதும், மேலும் 15 வயதில் மகளும, 13 வயதில் மகனும் இருப்பது என்ற அதிர்ச்சி தகவலை தெரிவித்தனர். ஏற்கனவே திருமணம் ஆனதை மறைத்தும், தனது வயதை குறைத்து கூறி ஏமாற்றி திருமணம் செய்தது அம்பலமானது. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் மகாஸ்ரீயின் பெற்றோர்கள் பராமரிப்பில் இருந்து வரும் இரு குழந்தைகளையும்,முதல் கணவரின் உறவினர்கள் போலீசில் ஒப்படைத்தனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த புது மாப்பிள்ளை ஸ்ரீதர் குடும்பத்தினர், பரமத்திவேலூர் போலீசில் புகார் அளித்துள்ளனர்.

இதனால், ஏமாற்றப்பட்டதை அறிந்த புது மாப்பிள்ளை ஸ்ரீதர் குடும்பத்தினர்,

புதுப் மணப்பெண் மகா ஸ்ரீஏற்றுக்கொள்ளமறுத்து, கட்டிய 5 பவுன் தாலி கொடியை திரும்ப பெற்றுக் கொண்டனர். புகார் குறித்து பரமத்திவேலூர் மகளிர் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திருமணமாகி மூன்றே நாட்களில் மணமகளின் குட்டு உடைந்ததால் மணமகன்விட்டார்கள்அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஜெ.இ.பத்மஜா, உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# உதயேந்திரம் பேரூராட்சி கூட்டத்தில் ரூ.87 லட்சம் திட்டப் பணிகளுக்கான தீர்மானம் நிறைவேற்றம்!



வாணியம்பாடி, டிச.6

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் கூட்டம் மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பேரூராட்சி மன்றத் தலைவர் ஆ.பூசராணி தலைமை வகித்தார். செயல் அலுவலர் ராஜலட்சுமி, துணைத் தலைவர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் வார்டு, செலவு மற்றும் திட்டப்பணிகள் உள்பட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மேலும், உதயேந்திரம் பேரூராட்சிப் பகுதியில் பல்வேறு பகுதிகளில் ரூ.87 லட்சத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை தொடர்ந்து கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டது.

பிறகு வார்டு கவுன்சிலர்கள் தங்களது வார்டுகளில் அடிப்படைத் தேவைகள் குறித்து கேட்டறிந்தனர்.

அப்போது, அதிமுக வார்டு உறுப்பினர்கள், திட்டப்பணிகள் செய்வதற்கான தகவல் முறையாக உறுப்பினர்களுக்குத் தரப்படுவதில்லை என்று கூறி திடீரென வெளிநடப்பு செய்தனர்.

தொடர்ந்து வார்டு உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தலைவர் மற்றும் செயல் அலுவலர் பதிலளித்தனர். கூட்டத்தில் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவரும், வார்டு உறுப்பினருமான ஆ.செல்வராஜ் மற்றும் நியமன உறுப்பினர் அம்பலவாணன், அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் எழுத்தர் குமார் நன்றி கூறினார்.



# விழுப்புரம் புதுப்பாளையம் கிராமத்தில் ஜெயலலிதா நினைவு தினம் அனுசரிப்பு!

விழுப்புரம்,டிச.6

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா T.புதுப்பாளையம் கிராமத்தில் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா 9 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாண்புமிகு சட்டமன்றஎதிர்கட்சிதலைவர்எடப்பாடி கே.பழனிச்சாமி ஆணைக்கிணங்க கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் இரா.குமரகுரு முன்னாள் எம்எல்ஏ அறிவுறுத்தலின் பேரில் இராமலிங்கம் ஒன்றியகழகசெயலாளர்வழிக்கட்டுதலின் பேரில் கள்ளக்குறிச்சி மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் முருகன் நடராஜன் ஏற்பாட்டில் அவருடைய தந்தை ஆதி. நடராஜன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள புரட்சித்தலைவி அம்மா திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி பின்பு பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் தண்ணீர் பாட்டில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் P.பலராமன்,மாவட்ட விவசாய அணி இணைச்செயலாளர்ஆதி.வெங்கடேசன் , கிளை கழக செயலாளர் D.முருகன் , முன்னாள் கிளை கழகச் செயலாளர் M.ராமு , மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் இணைச் செயலாளர் P.ரவி, மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் R.வெங்கடராமன் , மாவட்ட மகளிரணி துணைச் செயலாளர்பிரியா ராஜேஷ், மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர்J.சஞ்சீவி,ஒன்றிய இளைஞர் பாசறை,இளம் பெண்கள் பாசறை துணைத் தலைவர் த.ஐயப்பன், ஒன்றிய மகளிர் அணி பொருளாளர் புஷ்பா முருகன், கிளை கழக செயலாளர், மணிகண்டன் பூத் ஒருங்கிணைப்பாளர் P.சிவலிங்கம்,முன்னாள் பொருளாளர் A.ஏழுமலை, அவைத்தலைவர் S.ஆறுமுகம், முன்னாள் அவைத்தலைவர் D.உலகநாதன்,கிளைக் கழக செயலாளர் V.அருள், ஒன்றிய மகளிர் அணி துணை செயலாளர் பஞ்சவர்ணம் முனியன் மற்றும் கழக தொண்டர்கள் உடன் இருந்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில்

# சூரிய மின்சக்தி பூங்கா அமைக்கும் திட்டம் உள்ளதா?

## பாராளுமன்ற கூட்டத்தில் ஆ.மணி எம்.பி. கேள்வி!

தர்மபுரி,டிச.6

தமிழ்நாட்டில் சூரிய மின்சக்தி உற்பத்திக்கு அதிக வாய்ப்புள்ள தருமபுரி மாவட்டத்திற்கு புதிய சூரிய மின் சக்தி பூங்காக்களை தொடங்க அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா? இருப்பின் சூரிய சக்தி திட்டத்தின்கீழ் சூரிய மின்சக்தி பூங்கா திட்டம் தொடங்க தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட மத்திய நிதி உதவி குறித்த விபரங்கள் என்ன ?



தமிழ்நாட்டில் தருமபுரி உள்ளிட்ட சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய அதிக வாய்ப்புள்ள மாவட்டங்களில் தனியார்துறை முதலீட்டை ஊக்குவித்து, சூரிய சக்தி பூங்காக்கள் பெரிய அளவிலான சூரிய சக்தி திட்டங்களை அமைக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி மற்றும் மின்சாரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீ பாத் யோசோ நாயக்கிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.







## பாலக்கோடு அருகே

# பயிர்களை நாசம் செய்த காட்டு யானை!

## இழப்பீடு வழங்க விவசாயி கோரிக்கை!!

பாலக்கோடு. டிச.6

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே செங்கோடபட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயி அனுமந்தன் ( 50), இவருக்கு சொந்தமான 2 ஏக்கர் விவசாய நிலத்தில் நெல், மஞ்சள், சோளம் பயிர்களை வளர்த்து வருகிறார். நெற்கதிர்கள் அறுவடைக்கு தையாராக இருந்த நிலையில் இன்று அதிகாலை அனுமந்தன் நிலத்திற்க்குள் புகுந்த ஒற்றை காட்டு யானை நெற்பயிர், மஞ்சள், சோளம் உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி சென்றுள்ளது. இது குறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் காட்டு யானைகள் வருவதை தடுக்க காட்டு பகுதிகளில் தடுப்பு வேலி, யாணை பள்ளம், தண்ணீர் தொட்டிகள் முறையாக அமைத்து கண்காணிக்கப்படாததால் தினமும் காட்டுயானைகள் ஊருக்குள் புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தி அட்டகாசம் செய்து வருகிறது. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு தமிழக அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயி கோரிக்கை விடுத்துள்ளார்.

# சட்டமன்ற உறுப்பினர் சாலை பணிக்கு பூமி பூஜை மற்றும் பல்நோக்கு கட்டிடம் மற்றும் நேர நியாய விலை கடை !

## எலவம்பட்டியில் மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்த சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி!!

திருப்பத்தூர் டிச.6

திருப்பத்தூர் மாவட்டம் எலவம்பட்டி ஊராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக சாலை வசதியை ஏற்படுத்தி கொடுத்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எலவம்பட்டி ஊராட்சி மங்கம்மா சாலை முதல் எலவம்பட்டி வரை 610 மீட்டர் முதலமைச்சரின் கிராம சாலை விரிவாக்க திட்டத்தின் வாயிலாக 37.16 லட்சத்தி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைப்பதற்கு பூமி பூஜை போட்டார்

எலவம்பட்டி ஊராட்சி முருகன் கோவில் வட்டத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்த

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு இறுதியில் வாயிலாக செவ்வாதுர் ஊராட்சி சாலூர் மோட்டூர் பகுதியில் 5 லட்சம்மதிப்பீட்டில்கட்டிமுடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை திறந்து வைத்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்

இந்த நிகழ்ச்சியில் கந்திலி ஒன்றிய சேர்மன் திருமுருகன் ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தர் உள்ளிட்டோர்இந்தநிகழ்ச்சியில்கலந்துகொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பாலக்கோடு அருகே

# விபத்தில் பலியான 2 வாலிபர்கள் சாவில் மர்மம் உள்ளதா?

## தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தினர் நேரில் சென்று விசாரணை!

பாலக்கோடு .டிச.6

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே சொன்னம்பட்டி பகுதியை சேர்ந்த சுனில்குமார் (19), முருகன் (20) ஆகியோர் கடந்த 26ம் தேதி இரவு சுனில்குமார் தனது மொபட்டில் முருகனுடன் பாலக்கோடு நோக்கி பயணம் செய்தபோது, சிக்கார் தனஅள்ளி நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதுகுறித்து இறந்த இளைஞர்களின் உறவினர்கள் மரணத்தில் மர்மம் உள்ளதாகவும் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இது குறித்து மத்திய ஆதிதிராவிடர் ஆணைய இயக்குநர் ரவிவர்மா, ஆராய்ச்சியாளர்கள் லிஸ்டர், சுரேஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேரில் சென்று விபத்து நடந்த பகுதி, வாகனம், நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் இளைஞர்களின் குடும்பத்தாரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது உறவினர்கள் விபத்தில் மர்மம் இருப்பதாகவும் இது குறித்து சிபிசிஐடி விசாரணை வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இந்த விசாரணையின் போது சப் கலெக்டர் காயத்திரி, டி.எஸ்.பிக்கள் ராஜசுந்தர், சிவராமன், சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் டி.எஸ்.சூர்யா, இன்ஸ்பெக்டர்கள் பாலசுந்தரம், சிவசங்கர் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.



தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே விபத்தில் பலியான 2 வாலிபர்கள் சாவில் மர்மம் உள்ளதா? என தேசிய ஆதிதிராவிடர் ஆணைய அதிகாரிகள் அப்பகுதிக்கு சென்று விசாரணை நடத்தினர்.